වාර්ෂික වාර්තාව 2011
ஆண்டறிக்கை 2011
Annual Report 2011

# ශ්‍රී ලංකා සංචාරක සහ හෝටල් කළමනාකරණ ආයතනය
# இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
# Sri Lanka Institute of Tourism & Hotel Management



# ஆண்டறிக்கை

## இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

# 2011






## உள்ளடக்கம்


அறிமுகம் 1

நோக்கு, பணிகள், தொனிப்பொருள், பெறுமதிகள் 1

நோக்கம் 2

விசேட நோக்கம் 3

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களின் வாழ்த்துச் செய்தி 4

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி 5

இலங்கை சுற்றுலா மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தின் 2011 சிரேஷ்ட முகாமைத்துவம் 6

பிரதேச பாடசாலை 6

கல்விசார் பணியாளர் சபை 7

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பாரிய வெற்றிக்காக சுற்றுலா வர்த்தகத்தினால் வழங்கப்படும் பங்களிப்புக்கள் 9

2011 செயற்சாதனையின் விசேட சந்தர்ப்பங்கள் 11

சமையல் கலைபீடம் 11

உணவு பாண பீடம் 12

சுற்றுலா வளத்தினை விருத்தி செய்யும் செயற்றிட்டம் 12

பிரவேச தகைமைகள் 18

தற்போதைய வேலைத்திட்டங்கள் 19

ஆய்வுத் திட்ட செயற்சாதனைகள் 20

பயிற்சி வசதிகள் 21

இணைத்தல், உள்நாட்டு வெளிநாட்டு பல்கலைக்கழங்கள் மற்றும் நிறுவனங்களை இனங்காணுதல் 22

பயிலுனர் பயிற்சி 22

தொழில் விருத்தி 22

பாடநெறியின் விபரங்கள் 24

2011 மாணவர்களின் விபரங்கள் 24

எமது பெறுமதிமிக்க ஊழியர் சபை 24

2011 நிதி வெளிப்பாடுகள் 25

## அறிமுகம்

2016ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலா கைத்தொழில் துறையினால் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வரவழைப்பதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவ்வாறான பாரிய சுற்றுலா கைத்தொழிலுக்கு சுமார் 600இ000 ஊழியர் அணியினருக்கான கேள்விகள் ஏற்பட்டுள்ளன. மானிட பலத்திற்ன பற்றாக்குறை வருடாந்தம் ஏற்படுவதனால், வருடாந்தம் மேற்கொள்ளப்படும் பயிற்சிகள் மூலம் பயிற்றப்பட்ட 1இ500 பேர் சுற்றுலாக் கைத்தொழில் துறையுடன் இணைந்து கொள்கின்றனர்.

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் ஆசியாவில் உபசரணை மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த பயிற்சிகளை வழங்கக் கூடிய சிறந்த நோக்குடன் சந்தையினை திசைமுகப்படுத்தி அதிஉயரிய ஹோட்டல் மற்றும் சுற்றுலா சார்ந்த பயிற்சியின் ஊடாக உரிய இலக்கு கொண்ட நோக்கினை எட்டக் கூடிய நாட்டின் தேசிய சுற்றுலா பயிற்சி நிறுவகமாகும்.

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் அதற்காகவே உருவாக்கப்பட்ட தரத்தினைக் கொண்ட 12 அறைகள் மற்றும் அதிநவீன வசதிகள் கொண்ட அறைகளையும் உள்ளடக்கியதாக ஹோட்டல் பாடசாலை தாபிக்கப்பட்டுள்ளது. கொழும்பு - 2, காலி வீதி, இல 78 கொண்ட இடத்தில் பொது உணவகம் மற்றும் பான விற்பனை நிலையத்தினைக் கொண்டதாக சமுத்திரா ஹோட்டல் என்ற பெயரில் பயிற்சி ஹோட்டல் நடத்தப்படுகின்றது. முன்னர் இருந்த செப்டன் ஹோட்டல் இதில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் அமைந்துள்ள தஹிர் கோட்போர்கூடம் நகரில் சம்மேளனங்கள், வர்த்தகக் கூட்டங்களுக்காக வசதிகளை வழங்கக் கூடிய கேட்போர் கூடமாகக் காணப்படுகிறது. இக்கேட்போர் கூடத்தில் அதிநவீன வசதிகள் கொண்டமைந்துள்ளதுடன் 250 பேர்களுக்கு அமரக்கூடிய வசதிகளும் காணப்படுகின்றன. குளிரூட்டப்பட்ட உயரிய ஆசனங்களைக் கொண்ட சிறந்த முறையில் செவிமடுக்கக் கூடிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், இதில் கற்புல செவிப்புல உபகரணங்கள் உட்பட அனைத்து நவீன வசதிகளும் தாபிக்கப்பட்டுள்ளன.

பிரதேச ரீதியில் சுற்றுலாப் பயிற்சியை வழங்குவதற்காக பிரதேச ஹோட்டல் பாடசாலைகள் கண்டி, அனுராதபுரம், கொக்கல, பண்டாரவள, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் செயற்படுகின்றன.

கொழும்பு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் நவீன பிரயோகம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியினையும், நவீன உபகரணங்கள் கொண்ட பிரயோக இரு மனைகளையும் மாணவர்களுக்காக தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களின் பிரயோகப் பயிற்சிக்காக இரு பயிற்சி உணவங்களும் காணப்படுவதுடன் இந்த உணவகத்தில் நவீன உபகரணங்கள் உள்ளடக்ங்கியிருப்பதுடன், பொது உணவக மற்றும் பான விற்பனை பிரிவினையும் உள்ளடக்கி உள்ளது. இதனூடாக மாணவர்களின் ஆக்கம் சமையல்கள் உட்பட பல்வேறுபட்ட நவீன செயற்பாடுகளின் ஊடாக அதிதிகளை வரவேற்கக் கூடிய அனைத்து வசதிகளும் காணப்படுகின்றன.

மாணவர்களுக்கான அவர்களின் தகவல் தொழில்நுட்ப வசதியை விருத்தி செய்யும் வகையில் கணனி ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், ஹோட்டல் பாடசாலையில் அமைந்துள்ள அதி உயரிய தரம் கொண்ட சுற்றுலா தொடர்பான நூலகத்தினையும் மாணவர்களுக்குப் பயன்படுத்த ஆர்வம் ஊட்டப்படுகின்றன.

## நோக்கு

ஆசிய சுற்றுலா மற்றும் உபசரணை கல்விக்காக வினைத்திறன் மிக்க மத்திய நிலையங்களில் ஒன்றாக இந்நிலையத்தை மாற்றியமைத்தல்.

## பணிக்கூற்று

- சுற்றுலா மற்றும உபசரணைக் கைத்தொழிலில் ஆர்வம் கொண்ட மாற்றமடைந்து செல்லும் சவால்கள் மற்றும் அதற்கிணங்கள செயற்பட்டு சுற்றுலா மற்றும் உபசரணைக் கைத்தொழிலை தேவைக்கேற்றவாறு மானிட பயிற்சிகளை வழங்குதல்.
- இலங்கையில் சுற்றுலா ஊக்குவிப்புக்கள் மேற்கொள்ளும் அதே சமயத்தில் சர்வதேச தரங்களுக்கு இணங்க சுற்றுலா மற்றும் உபசரணைசார் கல்வியினை வழங்குதல்.
- சுற்றுலா மற்றும் உபசரணை சார்ந்த துறைகளில் நீடித்த நிரந்த விருத்தியினை உறுதிப்படுத்தி நாட்டின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் வாழும் இளைஞர்களுக்காக தொழுக்கான சூழல் மற்றும் வரபிரசாரங்களை வழங்குதல்.

## தொனிப்பொருள்

முழு உலகையும் அபிமானத்துடன் வெற்றிகொள்ளல்.

இலங்கையை உபசரணை சேவையில் அதிஉன்னத இடமாக மாற்றியமைத்தல்.

## விழுமியங்கள்

| | |
|---|---|
| பண்புசார் தரம் | - அதிசிறந்த உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்குவதற்காக மாணவர்களுக்காக கூடுதலாக பெறுமதியினை வழங்குதல். |
| கல்வி செயற்பாடுகள் | - சகல மாணவர்களுக்காகவும் எமது தரத்திற்கான வெற்றிகள் பங்கேற்பு மற்றும் அறிவு விருத்தியினையும் உறுதிப்படுத்தல். |
| பூரணத்துவம் | - சகல பணிகளுக்காகவும் முழுமையாக மற்றும் தொழில்சார் விழுமியங்களை உயர்தரத்திற்கு அமைய அமுல்படுத்துவதற்கு முயற்சித்தல். |
| கூட்டு முயற்சிகள் | - இலங்கை சுற்றுலா மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவகம் நோக்கத்தை எட்டுவதற்காக எமது மாணவர்களின் தேவைகளை வழங்குவதற்காக உரிய வறையறைக்குள் கூட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல். |
| கௌரவம் | - மானிட ஊழியத்திற்கு பெறுமதியினை வழங்குவதற்காக விருத்தி செய்வதற்காக செயற்சாதனையினை மதிப்பீட்டு உட்படுத்தல். |
| சிறந்த பிரஜை | - நாட்டுக்கு மற்றும் சமுகத்திற்கு சிறந்த பிரஜையாக மாற்றப்பெறல். |
| நிரந்தரத்தன்மை | - நாட்டுக்கு தேவையான மற்றும் சமூக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிலைப்பாட்டு அபிவிருத்தியினை முன்னெடுத்தல். |

## நோக்கம்

- பயிற்சி முறைகள் ஊடாக உரிய காலத்திற்கு மேற்கொள்ளப்படும் சீர்த்திருத்தங்கள் மற்றும் பாடவிதான விருத்தியின் ஊடாக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் தற்போதைய சுற்றுலா கல்வி வேலைத்திட்டங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.
- கைத்தொழில் தேவையினை வழங்குதவற்கு புதிய சுற்றுலா மற்றும் கல்வி வேலைத்திட்டங்களை விருத்தி செய்வதன் மூலம் உள்நாட்டு மற்றும் உலக பரவலாக்கல் சுற்றுலாக் கைத்தொழில் மானிட வளத் தேவைக்காக ஈடுபடுத்தல்.

- எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் உலக சுற்றுலா அமைப்பின் கருத்தினை எட்டுதல்.
- வியூகத் திட்டங்கள் உடன்படிக்கைகளை விரிவுபடுத்தி உரிய இலக்கினை எட்டுதல்.
- இரண்டு வருடங்களுக்குள் தேசிய மற்றும் சர்வதேச பங்காளர்களின் வலையமைப்பினை உருவாக்குதல்.
- ஒரு வருடத்திற்குள் ஊழியர் சபைக்காக தொழில்சார் அபிவிருத்திக்கான வசதிகள் வழங்குதல் மற்றும் தரத்தினைக் கட்டியெழுப்புவதற்குரிய அர்ப்பணிப்பு செய்த மானிட வள அபிவிருத்திப் பிரிவினை கட்டியெழுப்புதல்.
- இலங்கை சுற்றுலா கல்வி வசதிக்கான கோட்பாடுகள் கண்டறிதல் மற்றும் தர விருத்தியின் மூலம் 2005ஆம் ஆண்டு தேசிய சுற்றுலாச் சட்டத்தில் தொடர்புபட்டுள்ள தேசிய சுற்றுலா கல்வியின் தரங்களுக்கு அமைய செயற்படல்.

## விசேட நோக்கங்கள்

- புதிய பாட இணை அறிவு மற்றும் பண்புசார் தரமிக்க கற்கை மற்றும் கற்பித்தல் முறைகளை உயர்த்துதல்.
- பீட அங்கத்தவர்களுக்காக கற்பித்தல் முறைகள் மற்றும் கல்வி செயற்பாடுகளுக்கு இணங்க பயிற்றுவிப்பாளர்களை பயிற்சியளிக்கும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சுற்றுலாவுக்குரிய திறமைகளை மேம்படுத்துவதற்காக ஹோட்டல் ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்காக புதிய பாடவிதானங்களை ஏற்படுத்தல்.
- புதிய பாடவிதானங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் மதிப்பீடுகளுக்கு உதவுதல்.
- தகவல் மத்திய நிலையங்கள் மற்றும் சமூகத்தை அடிப்படையாக்க கொண்ட சுற்றுலாவுக்காக சுற்றுலாத் தகவல்களைத் தீர்மானிக்கும் முறைகளை அறிமுகப்படுத்தல்.



## கௌரவ அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

சுற்றுலா கைத்தொழில் இலங்கையின் பிரதான பொருளாதார ரீதியிலான பயன்களைப் பெறக்கூடிய துறையாகும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா அபிவிருத்தி உபாய திட்டமிடல்களுக்காக மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கினை அடிப்படையாக்க கொண்டு சூழலுக்குப் பொருத்தமான நீடித்த நிரந்த சுற்றுலாக் கைத்தொழுலை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் உபாய திட்டங்களுக்கு அமைய கைத்தொழுக்குரிய அரச கொள்கைகளைப் பின்பற்றுதல். தேவைகளுக்கமைய மானிட வளத்தினைக் கட்டியெழுப்புதல், உட்கட்டமைப்பு வசதி, தேவைத்தரங்களை விருத்தி செய்தல், விற்பனை மற்றும் சமூகத் தொடர்புகளும் சுற்றுலாப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு சுற்றுலாக் கைத்தொழில் துறையினை விருத்தி செய்தல் ஆகிய விரிவான துறைகளை தொடர்புபடுத்திச் செயற்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹிந்த சிந்தனையில் பிரதான நோக்கிற்கு அமைய செயற்பட்டு வியூக திட்டமிடல்களுக்கு இணங்க நாட்டு மக்களின் பொளாதார அபிவிருத்தியின் பிரதான பயனாளியாக மாற்றியமைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய இலங்கையின் பிரதான சேவையாக சுற்றுலாக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் போது சுற்றுலாத்துறை சார்ந்த பயன்களை குறைந்த வருமானம் பெறுவோருக்கும் அனுபவிப்பதற்கான வாய்ப்பினை வழங்கி இத்துறையை அபிவிருத்திக்காக பொருளாார அமைச்சு பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளது.

**பசில் ராஜபக்ஷ**
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி
## நிறைவேற்று உத்தியோகத்தர்)
## வாழ்த்துச் செய்தி



இன்று இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் புதிய சவால்களை எதிர்கொண்டு உள்நாட்டு உபசரணை கைத்தொழில் துறையில் முன்னர் என்றுமில்லாதவாறான அபிவிருத்தியினை எட்டியுள்ளது. 2016ஆம் ஆண்டில் இலங்கைக்கு 2.5 மில்லியன் சுற்றுலாப் பிரயாணிகளை வரவழைக்கும் எதிர்பார்ப்புடன் 2013ஆம் ஆண்டு உலகின் மிகவும் பயன்மிக்க சுற்றுலா கேந்திர நிலையமாக இலங்கையைப் பலப்படுத்தும் பணிகளுக்கு உதவும் வகையில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு சந்தையை கீர்த்திமிக்க சர்வதேச உபசரணை வகைப்படுத்தல்களுடன் பிரவேசித்தலும், கற்பிட்டி, திருகோணமலை, பாசிக்குடா, கல்குடா ஆகிய விடுதிகளை துரிதகதியில் விரிவுபடுத்தி இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் மானிட வளத் தேவையினை அதிகரித்து பொருத்தமானவாறு பயிற்றுவிக்கப்பட்டோரை வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

40 ஆண்டுகளை விட மேற்பட்ட காலமாக சுற்றுலாப் பயிற்சித் தேவையினை வழங்கும் பிரதான நிறுவகமாக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் அமுலிலுள்ள பயிறசிப் பாடநெறிகள் உலகில் விரிவடைந்துள்ள தரத்திற்கு சமமாக முன்னெடுப்பதனை உறுதிசெய்யும் வகையில் பாரிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதற்காக, உள்நாடு மற்றும் சர்வதேச சந்தையில் கவர்ச்சிக்கு உட்படுத்தக் கூடிய பொருத்தமான புதிய பாடநெறிகள் எமது பயிற்சிகளுக்காக அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. தற்போது சமுத்ரா ஹோட்டலில் சகல வசதிகளும் கொண்ட விருத்தி செய்யப்பட்ட விரிவுரையாளர்களின் மேற்பார்வையின் கிழ் பாடசாலை மாணவர்க-ளினால் செயற்படுத்த நடவடிக்கைகள் முன்னெ-டுக்கப்பட்டுள்ளன. அத்துடன், பேஸ்ரி, பேக்கரியைப் போன்று லொன்றி சார்ந்த பாடநெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன மேலும், கொழும்பில் இருந்து இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவக வளாகத்தில் லொன்றி இலகு உணவுப் பொருட்கள் மற்றும் வர்த்தக மத்திய நிலையத்தைத் தாபிக்க நாம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இச்சகல முன்னேற்றங்களுக்காகவும் சுற்றுலா கைத்தொழிலுக்காக உயர்தரத்தினைக் கொண்ட சேவை வழங்கும் வகையில் தேவையான உயர் மானிட பலத்தினை வழங்கும் இயலுமையினை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு இயலுமை கிடைக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**சேனக விஜயவர்தன**
பணிப்பாளர் நாயகம் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தல்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி மற்றும் ஹோட்டல்
முகாமைத்துவ நிறுவகம்

## சிரேஷ்ட முகாமையாளர்கள்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் 2011, கொழும்பு

பணிப்பாளர் நாயகம்

திரு.. சேனக விஜயவர்தன.

பதிவாளர்

திருமதி மாலினி கனேகொட

பதில் வதிவிட முகாமையாளர்

திரு. தம்மிக குணதிலக

## சிரேஷ்ட விரிவுரையாளர்கள்

ஜனாப். ரீஸா டீன்

திருமதி. இந்திரானி விஜேவர்தன

திரு. எச்.கே.சாமன் பெரேரா

திரு. திலக் பதிரன

திரு. மங்கல சுரவீர

## பிரதேச பாடசாலைகள்

அதிபர், கண்டி

திரு. சேனக விஜேவர்தன

சிரேஷ்ட விரிவுரையாளர்,கண்டி

திரு. நலீன் கஹடபிடிகம

அதிபர், கொக்கல

திரு. பிரபோத குலதுங்க

அதிபர், அனுராதரபும்

திரு. காமினி அந்ரா கென்தீ

நிலையப் பொறுப்பு சிரேஷ்ட விரிவுரையாளர்

திரு. கனிஷ்க என் ஜயதுங்க

நிலையப் பொறுப்பு சிரேஷ்ட விரிவுரையாளர் - பண்டராவெல

திரு. ரியன்சீ ஜயவர்தன

பிரதிப் பணிப்பாளர் நிருவாகம்

திரு. அசோக்க பெரேரா

பதில் உதவிப் பணிப்பாளர் - நிதி

திருமதி மேரியன் பெர்னாண்து

உதவிப் பணிப்பாளர் - பராமரிப்பு

திரு.ரஞ்சன பெர்ணாந்து



கல்விசார் பணியாளர் சபை - கொழும்பு



கல்விசார் பணியாளர் சபை - கண்டி



கல்விசார் பணியாளர் சபை - கொக்கல



கல்விசார் பணியாளர் சபை - பண்டாரவளை



கல்விசார் பணியாளர் சபை - இரத்தினபுரி



கல்விசார் பணியாளர் சபை - [illegible]

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்தவ நிறுவகத்தின் அதி உயர் வெற்றிகள்.




இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் பிரதான சுற்றுலா பயிற்சி நிறுவகமாக அதன் தரத்தைப் பேண முடிந்துள்ளது. முதல் தடவையாக சுற்றுலா திறமை விருதுக்காக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் விண்ணப்பிக்கப்பட்டதுடன், இதன் வகைப்படுத்தல்கள் ஒன்பது பிரிவின் கீழ் வெற்றிகள் பெறப்பட்டதுடன், இது பாடசாலை எட்டியுள்ள தரத்தினை மீண்டும் மீண்டும். உறுதிப்படுத்துவதாகும்.




National Bartender cocktail போட்டித்துறையில் சுற்றுலா கைத்தொழிலில் குடிபான விற்பனைப் பணியாளர்கள் டீயசு வுநனெநசளூ இடையே நடத்தப்பட்டது. இப்போட்டித் தொடரில் வெற்றியாளர்கள் சகல பொறுப்புணர்வுகளுடனும் சிங்கப்பூர் பயிற்சி வேலைத்திட்டத்திற்காக ஈடுபடத்தப்பட்டனர். பயிலுனர் பிரிவின் கீழ், இறுதிப் போட்டித் தொடருக்காக பங்கேற்பதற்கும் இதற்காக 5 மாணவர்களைப் பங்கேற்பு செய்வதற்காக சந்தர்ப்பங்கள் பெறப்பட்டன இது மிக உயர்ந்த அனுபவங்களைக் கொண்ட குடிபான விற்பனை நிலை பணிப்பாளர் (Bar Tenders) இடையே நடத்தப்பட்டது. இதில் ஹோட்டல் பாடசாலையின் மாணவர்கள் Most Creative Cocktail இற்காக வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

## சுற்றுலா கைத்தொழிலுக்கு வழங்கப்படும் பங்களிப்புக்கள்.

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் அரச உபசரணையில் கல்வி நிறுவகமாக பொதுவான சேவை பணிகளுக்கு மேலதிகமாக விரிவுரையாளர்களின் தேர்ச்சி அறிவு, தேவையான அமைப்புகளுக்காக வழங்கப்படுகின்றன. அவ்வவ் அமைப்புக்களின் தேவைகளுக்கு இணங்க பாடநெறிகள் வகுக்கப்படுகின்றன.

| சிறிய மற்றும் நடுத்த அளவு வர்த்தகப் பயிற்சிகள் 2011 | | | | |
|---|---|---|---|---|
| | துறைகள் | அமைப்புக்கள் | நேரம் | பயனாளி களின் எண்ணிக்கை |
| 1. | விடுதி சேவை பணியாளர் சபை பயிற்சி | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | மார்ச் 12இ 13 | 36 |
| 2. | உணவு பெற்றுக் கொள்ளும் முறைகள் உணவு பான சேவைப் பயிற்சி | பிரித்தானி அமெரிக்க புகையிலைக் கம்பனி | ஏப்ரல் 5இ 6 | 15 |
| 3. | உணவு பான விற்பனை நிலைய முகாமைத்துவம் | இலங்கை கடற்படையினர் | ஏப்ரல் 18-29 | 14 |
| 4. | உணவு பான மனை நிருவாகப் பயிற்சி | அலரி மாளிகை | மே 3 - 6இ 9 -12 | 93 |
| 5. | ஊத்தியோகத்தர்களுக்கான உபசரணை உதவிப் பயிற்சி | அலரி மாளிகை | மே16 - 23 | 03 |
| 6. | ஊபசரணை இல்ல வேலைத்திட்டங்கள் | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | ஜுன் 18இ 25 | 85 |
| 7. | உணவு பான பயிற்சி அலுவலக உதவியாளர்களுக்காக | விவசாய அமைச்சு | ஆகஸ்ட்20 | 10 |
| 8. | உணவு பான பயிற்சி அலுவலக உதவியாளர்களுக்காக | சிவில் விமான சேவைகள் அமைச்சு | ஆகஸ்ட்27 | 12 |
| 9. | புட்டத்தை எதிர்பார்ப்பவர்களுக்காக உணவு பெறும் முறைகள். | முகாமைத்துவ பீடம் வடமேல் பல்கலைக்கழகம் | டிசெம்பர் 17 | 45 |
| 10. | தொழில் பயிற்சி பாடநெறி | நேஸ்லே நிறுவனம் | டிசெம்பர் 10 | 50 |
| 11. | உணவு பான குறுகிய கால பயிற்சி கனிஷ்ட ஊழியர்களுக்காக | இலங்கை டெலிகொம் நிறுவனம் | டிசெம்பர் 17 | 08 |
| 12. | உணவு பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தும் வேலைத்திட்டம் | நுாவலபிட்டி நகர சபை | டிசெம்பர் 20 | 35 |

## 2011 செயற்சாதனை விசேட சந்தர்ப்பங்கள்

### தங்குமிட முகாமைத்துவ செயற்பாடுகள் (Accommodation Operations) பீடம், கொழும்பு

- சுற்றுலா வளத்தினை விருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ், ஜப்பான் Ritsumeikan ஆசிய பசுபிக் பல்கலைக்கழகத்தின் கலாநிதி Kayhan Tajeddini உடன் 2011 ஆகஸ்ட் 8 18 தொடக்கம் ஹோட்டல் முகாமைத்துவ செயலமர்வில் பங்கேற்றல்.
- Karcher சுத்தப்படுத்தும் உபகரணத்தை தறுவிக்கும் துடாவ வர்த்தக தனியார் கம்பனியுடன் இணைந்து மனை நிருவாக பீடத்தினால் மனை நிருவாகம் மற்றும் சுத்தப்படுத்துபவர்களுக்கான புதிய உபகரணங்களை அறிமுகப்படுத்தும் ஒருநாள் பயிற்சி செயலமர்வு நடத்தப்பட்டது.




### சமயல் பிரிவு பீடம்

- கொழும்பு விகாரமாக தேவி பூங்கா வனத்தில் இடம்பெற்ற "கிதுலக அருன" கண்காட்சியில் வர்த்தக கூடங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- சுவை மிகுந்த Easy Food Health Guide என்ற சஞ்சிகைக்காக உணவுப் பட்டியல்கள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூலம் வழங்கப்பட்டன.
- 2011 மார்ச் மாதம் ஸ்பேனின் தேசிய சமயலாளர்களினால் நடத்தப்பட்ட Molecular Cooking வேலைத்திட்டத்திற்காகப் பங்கேற்றல்.
- சுற்றுலா வளத்தினை விருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் ஜப்பான் டோக்கியோவில் பகிரங்க உணவகமான KINOBU இல் Takuji Takahashi மற்றும் Junji Takahashi வளவாளர்கள்) ஜப்பான் சமயல் கலை தொடர்பான வேலைத்திட்டங்களில் பங்கேற்றல்.
- 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத்தில் ஜப்பான் சமயல் மற்றும் உணவு கலாச்சாரம் என்ற பெயரில் சஞ்சிகை வெளியிடல்





## உணவு பாண பீடங்கள்

- 2011 ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி முதலாவது வுயடிடந வுழி போட்டித் தொடர் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் நடத்தப்பட்டது. இது பாடசாலை மாணவர்களுக்காக திறந்த அடிப்படையில் நடத்தப்பட்டது,
- இலங்கை சுற்றுலா மற்றும் முகாமைத்துவ நிறுவகத்தின் உதவியுடன் குசநந டுயமெய தனியார் வர்த்தக நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கை ஹோமட்டல் பாடசாலை பட்டதாரிகள் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 26 ஆவது யேவழையெட டீயசவநனெநச போட்டித் தொடருக்காக உணவு பான பிரிவில் மாணவர்கள் பங்கேற்றனர்.






## சுற்றுலா வளத்தினை விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள்

இலங்கைசுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகதின் சுற்றுலா வளத்தினை அமுல்படுத்தும் செயல்திட்டத்தில் அடங்கும் மானிட வள உள்ளீடு முதலாவது வாசகத்திற்கு அமைய அமுல்படுத்தல்.

## அறிமுகம்

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சுற்றுலா வளத்தினை அமுல்படுத்தும் செயல்திட்டத்தின் மானிட வள உள்ளீடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

## மானிட வள அபிவிருத்தி உள்ளீட்டின் நோக்கம்

இதன் முழுமையான நோக்கமாக அன்னிய நாட்டு செலாவணியை உழைப்பதன் மூலம் சுற்றுலாப் பிரயாணிகளை கவர்ச்சிக்கு உட்படுத்தி விசேடமாக ஜப்பான் சுற்றுலாப் பிரயாணிகளை கவர்ச்சிக்கு உட்பகடுத்துவதன் மூலம் வருமான வழிமுறைகளை உருவாக்கிக் கொள்வதன் ஊடாக மக்களின் வருமான மட்டத்தை விருத்தி செய்தல் மற்றும் வறுமையினை கட்டுப்படுத்துவதாகும்.

இவ்வேலைத்திட்டம் மூலம் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டிருப்பது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பணியாளர் சபையின் திறமைகளை மேம்படுத்த மற்றும் இலங்கைக்கு அதிஉயரிய சந்தை வாய்ப்புக் கொண்ட சுற்றுலாப் பிரயாணிகளின் விசேடமாக ஜப்பான் சுற்றுலாப் பிரயாணிகளை கவர்ச்சிக்கு உட்படுத்துவதற்காக சர்வதேச மட்டத்திலான சேவைத் தரத்தைப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் ̇வழங்குவதாகும்.

இந்நோக்கத்தினை எட்டுவதற்காக பணியாளர் சபையின் தொழில் மற்றும் பாடஇணை அபிவிருத்தியினை ஏற்படுத்த அங்கீகரிக்கப்படட சர்வதேச பல்கலைக்கழகம் அல்லது நிறுவன சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கும் அதிஉயரிய சந்தை கொண்ட சுற்றுலா கேந்திர நிலையத்தின் தேவைக்கேற்றவாறு பாடவிதான தரத்தினை மேம்படுத்தவும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Ritsumeikan பொறுப்புக்கள்

இப்பணிகளுக்காக போட்டிகரமான விலைமனுக்கோரல் ஊடாக இவ்வாலோசனை ஒப்பந்தம் ஆசிய பசுபிக் வலய பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது. ஆசிய பசுபிக் பல்கலைக்கழகம் Ritsumeikan பொறுப்பில் பங்காகக் காணப்படுவதுடன், அது ஜப்பானின் மூன்றாவது மிகப் பெரிய கல்வி முறையாகும். இவ்வேலைத்திட்டத்திற்கு சர்வதேச தரத்தினை வழங்குவதற்காக கொங்கொங் பொலிடெக்னிக் நிறுவனத்தின் அவுஸ்திரேலிய சல்ஸ்பேக் நிறுவனம் மற்றும் வில்லியம் அங்கிலிஸ் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஆலோசகர்கள் வரவழைக்கப்பட்டன.

## விசேட செயற்பாடுகள்

இவ்வுள்ளீட்டின் கீழ், விசேட செயற்பாடுகள் மூன்று உப உள்ளீட்டுப் பிரிவுகளாகக் குறிப்பிட முடியும்.

1. புயிற்சி அளிக்கும் வேலைத்திட்டத்தின் பயிற்சிகள்
2. சுற்றுலா வர்த்தகத்துக்குரிய வேலைத்திட்டப் பயிற்சிகள்
3. பாடவிதான அபிவிருத்தி

### பயிற்றுவிக்கும் வேலைத் திட்டங்களின் பயிற்சி

இவ்வேலைத் திட்டத்தின் உப உள்ளீட்டின் நோக்கமாக அமைவது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் கல்வி பீடத்திற்காக விசேட கவனத்துடன், சுற்றுலா வர்த்தகத்தில் இப்பீடத்தினை அபிவிருத்தி செய்வதாகும். ஊரிய வேலைத்திட்டத்தின் தீர்மானங்களுக்கு அமைய பயிற்சி பீட அங்கத்தவர்களுக்கு அவர்களின் பங்கேற்புக்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ்வுள்ளீட்டின் கீழ் நடத்தப்பட்ட வேலைத்திட்டங்கள கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### அ) கல்விப் பயிற்சி

இக்கல்விப் பயிற்சியின் நோக்கமாக அமைவது பீட அங்கத்தவர்களுக்கு செயற்பாட்டுக் கற்பித்தல் கலைசார் முறைகளை அறிமுகப்படுத்துவதாகும்.



இவ்வேலைத்திட்டம் சகல கல்விப் பணியாளர் சபைகளினதும் தேவைக்கமைய மாற்றமான முறையில் 3 பிரிவுகளுக்கு இணங்க இடம்பெறுகின்றன. இம்மூன்று பிரிவுகளில் 2 கொங்கொங் பொலிடெக்னிக் பல்கலைக்கழகத்தின் கல்விப் பயிற்சி தொடர்பான பிரதான பயிற்சியாளரான திருமதி அடெல் கிரகமினால் நடத்தப்படடது.



இரண்டு வருடங்களைவிட மேற்பட்ட காலத்திற்குள் நடத்தப்பட்ட மூன்றாவது தவனை ஆசிய பசுபிக் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிலிப் படொவினால் நடத்தப்பட்டது.

60 யை விட மேற்பட்ட பீடங்களின் பணியாளர் சபை அங்கத்தவர்களின் கூட்டு முயற்சியுடன் இவ்வேலைத் திட்டத்திற்கான பங்கேற்புக்கள் இடம்பெற்றன.

முதல் இரு தவணைகளுக்குள் 2011 ஜுலை 04 மற்றும் ஆகஸ்ட் 05 ஆகிய தினங்களில் நடத்தப்பட்டதுடன், மூன்றாவது தவணை 2011 செப்டம்பர் 04 ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

### ஆ) ஹோட்டல் பாடசாலை முகாமைத்துவம்



இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்காக இரண்டு கட்டங்களைக் கொண்டதாக இது நடத்தப்பட்டது. இதன் நோக்கமாக அமைந்தது உலகின் பகிரங்கமாக மிக உயரிய மட்டத்தில் நடத்தப்பட்ட சுற்றுலா நிறுவன முகாமைத்துவத்தினை யார்? மேற்கொள்கின்றார் என்பது தொடர்பில் விளக்கத்தினை வழங்குவது இதன் முதலாவது வேலைத்திட்டம் அவுஸ்திரேலிய சல்பேக் பல்கலைக்கழகத்தின் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பீடாதிவதி பேராசிரியர் லெனாட் வொன்டலினால் நடத்தப்பட்டது.

இவ்வேலைத்திட்டம் ஹோட்டல் பாடசாலை முகாமைத்துவத்திற்கு உரியதாக பாடவிதான விருத்தி, மாணவர் செயற்பாட்டு மதிப்பீடு மற்றும் வரவேற்புகள் ஆகிய பகுதிகளைக் கொண்டு அமைந்துள்ளன.
இவ்வேலைத்திடடம் 2011 ஜுலை மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

### இ) சிரேஷ்ட ஹோட்டல் முகாமைத்துவம்

இவ்வேலைத் திட்டம் பேராசிரியர் போல் பெல்போட்டினால் நடத்தப்பட்டது. முன்னர் பொலிடெக்னிக் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிய இவர் தற்போது வியட்நாம் உபசரணை இல்லம் தொடர்பான சர்வதேச பாடசாலையின் கல்விசார் பணியாளராக சேவையாற்றிகிறார். 2009 ஆம் ஆண்டு கொங்கொங் பொலிடெக்னிக் பல்கலைக்கழகதினால் வழங்கப்பட்ட கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான விருது முதல் தடவையில் இவரினால் வெற்றிகொள்ளப்பட்டது. ஹோட்டல் பாடசசாலை மற்றும் அதன் இணைப்புகளுக்கு அமைய தர முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. அவரினால் நடத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் 2011 ஒக்டோபர் 17 ஆம் திகதி 27ஆம் திகதி வரை இடம்பெற்றன.



### ஈ) ஹோட்டல் முகாமைத்துவம் மற்றும அதிதிகளை வரவேற்கும் செயற்பாடுகள்.

இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது, Ritsumeikan ஆசிய பசுபிக் பல்கலைக்கழக பேராசிரியர் K Tajeddini இன் மூலமாகும். ஹோட்டல் முகாமைத்துவத்துக்குரியதாக அதிதிகளை வரவேற்கும் செயற்பாடுகள் தொடர்பில் இர்ணடாவது வாரத்தில் கவனம் செலுத்தப்பட்டது. 2011 ஆகஸ்ட் 8ஆம் திகதி தொடக்கம் 20 திகதி வரையிலான காலப்பகுதிக்குள் நடத்தப்பட்டதுடன், இதற்காக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பணியாளர்களைப் போன்று சுற்றுலாத் துறைசார்ந்த விரிவுரையாளர்களும் பங்கேற்றனர்.



## உ) ஜப்பான் உணவு சமைத்தல் மற்றும் உணவக முகாமைத்துவம்





ஜப்பான் கியோடோ பிரதேசத்தில் சம்பிரதாய ஜப்பான் உணவு தொடர்பான விசேட அறிவு கொண்ட ஜப்பான் சமயலாளர்களினால் இவ்வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. திரு.தக்காஷி டகுஜீ ஜப்பான் பூராகவும் கிளைகளைக் கொண்டு இயங்கும் கியோடோவில் அமைந்துள்ள பிரதான ஜப்பான் உணவகத்தில் உரிமையாளராகும். ஆத்துடன், ஜப்பான் தேசிய தொலைக்காட்சி அலைவரிசையிலும் அவர்கள் சமயலாளர்களாக நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலதிகமாக அவர் ஜப்பான் இகபானாக் கலை, கிமோனா தயாரித்தல் போன்ற ஜப்பான் உணவகங்களின் செயற்பாடுகளுக்கான அத்தியாவசியமான ஏனைய விடயங்கள் தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வேலைத்திட்டத்திற்காக சுமார் ஒரு மாதம் கடந்ததுடன் இறுதித் தினத்தில் ஜப்பான் சமயலாளர்களின் வழிகாட்டலின் கீழ், பங்கேற்றோரினால் தயாரிக்கப்பட்ட உணவின் சுவையைப் பரிசோதிப்பதற்காக வருகை தந்த அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டன. திரு.தக்காஷி அவர்கள் பெற்றுள்ள கீர்த்தியினால் இலங்கைக்கான ஜப்பான் தூதுவரினால் அவரது விசேட அதிதிகளுக்காக இரவு உணவினை தயாரிப்பதற்காக அழைப்பு விடுக்கப்பட்டது.

## ஊ) சுற்றுலா வழிகாட்டல்

சுற்றுலா வழிகாட்டலில் TOT வேலைத்திட்டம் பேராசிரியர் காசிம் வபதரியினால் நடத்தப்பட்டதுடன் அவர் றிஸ்மேகன் ஆசிய பசுபிக் பல்கலைக்கழகத்தின் உதவிப் பேராசிரியர் என்பதுடன், ஜப்பான் மற்றும் மத்தியகிழக்கில் சுற்றுலா வழிகாட்டல் செயற்பாட்டாளராக வழிகாட்டல்களை வழங்குகிறார். சுற்றுலா வழிகாட்டலில் பிரதான விரிவுரையாளர் மற்றும் ஹோட்டல் பாடசாலை பீடத்தின் அங்கத்தவர்களும் இதில் பங்கேற்றன. சுற்றுலா வழிகாட்டல் வேலைத்திட்டம் இரு வார காலப் பயிற்சினைத் தழுவியது.



## எ) ஜப்பான் கலாச்சாரம் மற்றும் உபசரணைகள்

ஜப்பான் தேசிய சுற்றுலாப் பிரயாணிகள் தொடர்பான அதி சிறந்த விளக்கத்தினை பெற்றுக் கொள்வதற்காக சுற்றுலாத்துறையின் இலங்கையின் பீடங்களுக்கான இவ்வேலைத் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதன்போது ஜப்பான் சுற்றுலாப் பிரயாணிகளின் பல்வேறுபட்ட பகுதியினரின் அறிமுகப்படுத்தல் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாக்களின் போது அவர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது, அவர்களின் விரும்பிய தேசங்கள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டன. இவ்வேலைத்திட்டத்தின் இறுதித் தினத்தில் சகலரும் வெளிக்களச் சுற்றுலாவில் பங்கேற்றனர்.



### ஏ) உணவுப் பானங்கள்

இவ்வேலைத் திட்டம் அவுஸ்திரேலியாவின் வில்லியன் எங்லீஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஸ்லீ நுகேட் மற்றும் ஜிம் ஏனச்சீனால் நடத்தப்பட்டது. வலயத்தின் உணவு, பானங்கள் சார்ந்த செயற்பாடுகள் எவ்வாறு மேற்கொள்வது பற்றியும் விசேடமாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

## பாடவிதான அபிவிருத்தியின் உள்ளீடுகள்

செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாக அமைவது இலங்கையில் காணப்பட்ட யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து பல காலங்களுக்குப் பின்னர் என்றுமில்லாதவாறு சுற்றுலா பிரயாணிகளின் வருகை அதிகரித்தது. இதற்கமைய, இத்துறை சார்ந்த தரத்தினை மேம்படுத்துதவற்கு மானிடவள தேவைக்காக துரித தேவைகள் காணப்பட்டன. இதற்காக, இலங்கையின் பிரதான சுற்றுலா மற்றும் உபசரணை தொடர்பான நிறுவனமான இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் பாடவிதானங்கள் தொடர்பாக மேற்பார்வை செய் வேண்டிய தேவை காணப்பட்டது. 1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இது தொடர்பான செயற்பாடுகள் விருத்தி செய்யப்பட்டன. தற்போது காணப்படும் பாடவிதானம், கைத்தொழிலில் இடைக்கிடையே ஏற்படும் தலையீடுகளின் அடிப்படையாகக் கொண்டு முறையாக திட்டமிடாத மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இது எவ்வாறாக இருப்பினும், ஆசியாவின் துரித முன்னேற்றத்தை எட்டிவரும் இக்கைத்தொழிலின் சவால் மிகுந்த கேள்விகளுக்கு கட்டமைக்கப்பட்ட பாடவிதானம் காணப்படுவதில்லை.

இதற்கமைய இச்சுற்றுலா பிரதான பாடவிதானத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட 11 பாடங்கள் அபிவிருத்தி செய்ய கவனம் செலுத்தப்பட்டன.

1. மனை நிருவாகம் (C/D)
2. அதிதிகளை வரவேற்கும் செயற்பாடுகள். (C/D)
3. உணவு பானங்கள் (Cr/C/D)
4. தொழிற்சார் சமயல்கலை (Cr/C/D)
5. சுற்றுலா முகாமைத்துவம் (Cr/C/D)
6. கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள் , சம்மேளனங்கள் மற்றும் கண்காட்சிகள் (D)
7. சுற்றுலா வழிகாட்டல் (C/D)
8. ஓய்வூ. சுற்றுலா முகாமைத்துவம் (C/D)
9. சுற்றுலா முகாதைத்துவம் (C/D)
10. சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா (D)

செயற்றிட்டத்தின் இவ்வுள்ளீட்டுக்கு அமைய (Cr) சான்றிதழ்கள் (C) மற்றும் டிப்ளோமா (D) வேலைத்திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டன. அத்துடன், இதன் கீழ் விருத்தி செய்யப்பட்ட கூட்டங்கள், ஊக்குவிப்புகள், சம்மேளனங்கள் மற்றும் கண்காட்சி சுற்றுலாக்கள் மற்றும் ஓய்வூ சுற்றுலா, சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா மற்றும் பேக்கரி விடயங்கள் தற்போது இவ்ஹோட்டல் பாடசாலை மூலம் கற்பிக்கப்படாத போதிலும், பாடங்கள் சுற்றுலா கைத்தொழிலுக்கு பாரியளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இப்பாடவிதான விருத்திக்காக அவுஸ்திரேலியா சல்ஸ்பேக் பல்கலைக்கழகத்தின் கொங்கொங் பொலிடெக்னிக் பல்கலைக்கழகத்தின் அவுஸ்திரேலியா வில்லியம் எக்லிஸ் பல்கலைக்கழகத்தின் ஜப்பான் ரிக்சுமேக்கன் பல்கலைக்கத்தின் பிரதிநிதிகள் கூட்டுப் பொறுப்பினை வகித்தனர்.

இதன் ஆரபத்தினூடாக பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்களின் பல்வேறு நிபுணர்களின் ஊடாக ஆசிய பசுபிக் பல்கலைக்கழகத்தின் உபதலைவர் கலாநிதி மெல்கம் கூப்பரினால் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ரிட்சுமிகன் ஆசிய பசுபிக் வலய பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் மொன்டி காசிம் மற்றும் ரிட்சுமிகன் பொறுப்பில் உபவேந்தர் செயற்றிட்டத்தின் உள்ளீடுகளுக்காக கொள்கை அடிப்படையிலான வழிகாட்டல்களை வழங்கினார்.

இப்பாட விதான விருத்திக்கான முறைகளை பயன்படுத்துவது பரஸ்பர ரீதியிலான நெருக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடாகும். இதன் அடிப்படை செயற்பாடாக பாடஇணை கற்கைகளை அறிமுகப்படுத்த முடியும். இலங்கைசுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் ஐந்து பல்கலைக்கழகங்கள் பங்கேற்றன. இப்பாடவிதான கற்கையில் ஆரம்ப அறிக்கை இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தினால் விருத்தி செய்து அங்கீகரிக்கப்பட்டது, இவ்ஆரம்ப அறிக்கையின் ஊடாக பாடங்களுக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக உரியதான பாடநெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

பாடவிதா விருத்தி அடுத்த கட்ட நடவடிக்கையாக ஆலோசகர்களின் பரிந்துறைகளுக்கு இணங்க சகல பாடங்களுக்கான விரிசல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதற்காக பாடஇணை கற்கை செயற்பாடுகளின் போது சேகரிக்கப்பட்ட தகவல்களைப் போன்று உலகில் விரிவடைந்துள்ள பாடவிதானங்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் அடிப்படையாகக் கொண்டு இதன் விரிசல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்விரிசல் பகுப்பாய்வின் ஊடாக பாடவிதானத்தின் மொத்த திட்டமிடல், விளக்கமான பாடவிதானம் மற்றும் பாடத்திட்டங்களும் விருத்தி செய்யப்பட்டதுடன், இவ் ஆவணம் ஹோட்டல் பாடசாலையினால் பெற்றுக் கொள்ளப்பட்டன.

தற்போது பாடஇணை விருத்தியின் இறுதிக்கட்டத்தை எட்டப்பட்டுள்ளது. சகல 11 பாடங்களுக்காகவும் பாடத்திடடங்கள் ஹோட்டல் பாடசாலையினால் பெறப்பட்டுள்ளன.

இம்முறையின் அடுத்த கட்ட நடவடிக்கையாக வெளிக்களப் பரிசோதனைகளை அறிமுகப்படுத்த முடியம்.

பாடத்திட்டங்களின் இறுதிக்கட்டமாக ஆசிரிய அறிவுரைப்புப் புத்தகங்கள் மற்றும் மாணவ கையேடுகளும் விருத்தி செய்யப்பட்டன. இவ்வாணங்களின் பிரதான உள்ளீடுகளின் பாடத்திட்டடங்கள் மற்றம் விரிவான
பாடவிதானங்களும் கொண்டமைந்திருந்தன.

இவ் ஆரம்ப செயற்பாடுகளைப் பின்பற்றி கிளைப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு இடையே விநியோகிகப்பதன் ஊடாக இப்பாடவிதானத்தை மீள்மதிப்பீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஹோட்டல் பாடசாலையினால் பயன்படுத்தவுள்ள விரிவான பாடநெறிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் பாடவிதானங்களை பரிந்துரை செய்வதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## சுற்றுலாக் கைத்தொழிலுக்கான பயிற்சி

இதன்கீழ் நான்கு பயிற்சி வேலைத்திட்டங்கள் நான்கு நடத்தப்பட்டன. இதில் ஒரு வேலைத்திடடம் கொழும்பில் நடத்தப்பட்டதுடன், மூன்று வெளி மாகாணங்களில் நடத்தப்பட்டன. இது தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வேலைத்திட்டம் | இடம் | வளவளார்களின் பங்களிப்பு |
|---|---|---|
| சுற்றுலா முகாமைத்துவம். | கொழும்பு | பேராசிரியர் பெற்றேசியா, அரபேட், ஜப்பான் ரிஸ்சும் கன், ஆசிய பசுபிக் வலய ல்கலைக்கழகம் |
| ஹோட்டல் முகாமைத்துவம் - உணவு பானங்கள். | அனுராதபுரம் | பேராசிரியர் எஸ் லீ நகேன், அவுஸ்திரேலியா எக்லிஸ் பல்கலைக்கழகம் |
| ஜப்பான் கலாச்சார மற்றும சுற்றுலா செயற்பாடுகள். | நீர்கொழும்பு | பேராசிரியர் டொடோ ரெக்கீ. கிரோசீ ஜப்பானின் ரிஸ்சும் கன் ஆகிய பசுபிக் வலய பல்கலைக்ககம் |
| ஹோட்டல் முகாமைத்துவ அதிதிகளின் வரவேற்று செயற்பாடுகள். | நுவரெலியா | பேராசிரியர் பிரகாஸ் சதொன், கொங்கொங் பொலி டெக்னிக் பல்கலைக்கழகம் |

## பிரவேச தகைமைகள்

சான்றிதழ் பாடநெறி

18 / 30 வயது

இரு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆங்கிலப் பாடம் உட்பட ஆறு பாடங்களில் க.பொ.த.(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

இடைக்காலப் பாடநெறி

6 மாதங்கள் வீதம் தொழில்நுட்ப அனுபவம் கொண்ட இரு சான்றிதழ் பத்திர பாடநெறிகளைப்பூர்த்தி செய்திருத்தல் அல்லது மேற்பார்வை மட்டத்தில் ஐந்து வருட கால அனுபவம்.

உயர் பாடநெறி

இடைக்காலப் பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

உபசரணை தொடர்பான டிப்ளோமா பாடநெறி

க.பொ.த (உ.த) பாடமாக ஆங்கில பாட உட்பட இரு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

கலைசார் பாடநெறிகள்

க.பொ.த. (ச.த) பரீட்சை வரை கல்வி கற்றிருத்தல்.

சுற்றுலா மற்றும் பயணங்கள்

சுற்றுலா டிப்ளோமா பாடநெறி

க.பொ.த (உ.த) இரு பாடங்கள் மற்றும் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்த நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவம் மற்றும் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் மூன்று வருட கால அனுபவம், ஆங்கிலம், புவியியல் கணனி இயலுமைகள் தொடர்பான அறிவு.

தேசிய சுற்றுலா வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்

ஒரே தடவையில் க.பொ.த (உ.த) இரு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது ஆறு பாடங்களில் க.பொ.த. (சா.த) சித்தியடைந்திருத்தல்.

இரு தடவைகளில் மேற்படாத தடவைகளில் ஆங்கில மொழியில் திறமை சித்தி பெற்றிருத்தல் மற்றும் சுறறுலா வழிகாட்டல் சாரதியாக மூன்று வருட கால அனுபவம்.

சுற்றுலா சாரதி வழிகாட்டல் வேலைத்திட்டம்

ஒரே தடவையில் க.பொ.த (.த) இரு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். ஆல்லது இரண்டு தடவைகளுக்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடன், க.பொ.த (சா.த) பரீடசையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**பிரதேச வழிகாட்டுனர்கள்**

க.பொ.த (சா.த) வரை கல்வி கற்றிருத்தல்.

| தற்போது அமுலிலுள்ள வேலைத்திடடங்கள் | | |
|---|---|---|
| வேலைத்திட்டம் | காலம் | வேலைத்திட்டக் கட்டணம் (மாதாந்தம்) |
| சான்றிதழ் பத்திர பாடநெறி | | |
| சமையலாளர் | 5 மாத | சந. 3,500.00 |
| உணவகம் மற்றும் பான நிறுவன சேவை | 5 மாத | சந. 3,000.00 |
| அதிதிகளை வரவேற்றல் | 5 மாத | சந. 3,000.00 |
| மனை நிருவாகம் | 5 மாத | சந. 3,000.00 |
| இடைக்காலப் பாடநெறி | | |
| தொழில்சார் சமயல் கலை | 5 மாத | சந. 4,100.00 |
| உணவகம மற்றும் பான விற்பனை சேவை | 5 மாத | சந. 3,500.00 |
| அதிதிகளை வரவேற்றல் | 5 மாத | சந. 3,500.00 |
| மனை நிருவாக முகாமைத்துவம். | 5 மாத | சந. 3,500.00 |
| உயர் பாடநெறிகள் | | |
| தொழில்சார் சமயல் கலை | 3 மாத | சந. 4,100.00 |
| உணவகம் மற்றும் பான நிறுவன சேவை | 3 மாத | சந. 3,500.00 |
| தங்குமிட முகாமைத்துவ செயற்பாடுகள். | 3 மாத | சந. 3,500.00 |
| உபசரணை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி | 3 வருடம் | சந. 5,700.00 |
| கலைசார் பாடநெறி | | |
| சமையலாளர் | 3 மாத | சந. 3,500.00 |
| உணவகம் மற்றும் பான நிறுவன சேவை | 3 மாத | சந. 3,000.00 |
| அதிதிகளை வரவேற்றல் | 3 மாத | சந. 3,000.00 |
| மனை நிருவாகம் | 3 மாத | சந. 3,000.00 |
| சுற்றுலா மற்றும் பயணங்கள். | | |
| சுற்றுலா டிப்ளோமா பாடநெறி | 2 வருடம் | சந. 60,000.00 |
| தேசிய சுற்றுலா வழிகாட்டுனர். | 4 மாத | சந. 45,000.00 |
| சாரதி சுற்றுலா வழிகாட்டுனர். | 3 மாத | சந. 30,000.00 |
| பிரதேச வழிகாட்டுனர். | 3 மாத | |


கல்விசார் செயற்சாதனைகள்
ஹோட்டல் மற்றும் ஹோட்டரி செயற்பாடுகள் தொடர்பாக நான்கு ஆண் கால முகாமைத்துவ டிப்ளோமா
உயர் பாட-நெறிகள்
இடைக்காலப் பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல்.
உயர் பாட-நெறிகள்
உயர் பாடநெறி
03 மாதங்கள்
தொழில்சார் சமயல் கலை
உணவு பான செயற்பாடுகள்
தங்குமிட முகாமைத்துவ செயற்பாடுகள்
இடைக்கால பாடநெறி
ஊரிய தொழில்நுட்ப பயிற்சியுடன் நான்கு ஆண்டு கால சான்றிதழ்பத்திர பாடநெறி.
இடைக்கால பாடநெறி
இடைக்கால பாடநெறி
06 மாதங்கள்
தொழில்சார் சமயல் கலை
உணவக மற்றும் பான சேவைகள்
அதிதிகளை வரவேற்றல்
மனை நிருவாகம்
சான்றிதழ் பத்திர பாடநெறி
17 - 30 வயதுக்கு இடைப்பட்ட க.பொ.த (சா.த) வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
அல்லது
கலைசார் பாடநெறி மற்றும் இரண்டு வருடங்களுக்குரிய தொழில் நுட்பவம் அநுபவம்.
சான்றிதழ் பத்திர பாடநெறி
சான்றிதழ் பத்திர பாடநெறி
05 மாதங்கள்
சமயல் கலை
உணவக மற்றும் பான சேவைகள
அதிதிகளை வரவேற்றல்
மனை நிருவாகம்

## இலகுபடுத்தவதற்கான வசதிகள்

உரிய தரத்தினை விட உயர்ந்த உற்பத்திகளை வெளியிடும் பிரயோக மற்றும் தொழில்நுட்ப முன்னேற்ற வசதிகள், மேம்படுத்தப்பட்ட பாடவிதானத்தினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தலும் நிறுவனத்தின் நம்பகத்தன்மை ஊடாக தேசத்துக்காக தொடர்ந்தும் சேவையாற்றுதல்.

மாணவர்களின் பெறுபேறுகளை வழங்குவதற்கு முன்னர் அவர்களுக்காக கூடுதலான தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களினை உருவாக்குதல், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் உற்பத்தி தொடர்பாகக் காணப்படும் கேள்வியினைக் காண்பிக்கக் கூடியவாறு மிகப்பெரிய சான்றாக அமைவது சகல பாடநெறியின் இறுதியிலும் சுற்றுலாக் கைத்தொழிலில் காணப்படும் வெற்றிடங்களுக்காக மாணவர்களின் கேள்விகள் அதிகரிக்கின்றமையாகும்.

மூன்றாண்டு கால மற்றும் நான்காண்டு கால முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறியினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் வேலையில்லைாப் பிரச்சினை மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படல்.

மாணவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள ஒரு சில வசதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- பயிற்சி இரு மனைகள்
- பயிற்சி உணவகம்
- பயிற்சி பான நிலையம்
- மனை நிர்வாக மாதிரி அறை
- நூலகம்
- அதிதகளுக்காகப் 12 அறைகள்
- பயிற்றுவிப்பதற்காக சமுத்ரா ஹோட்டல்
- 30 கணினிகளைக் கொண்ட கணினி ஆய்வுகூடம்
- ஒரு அறையில் 30 மாணவர்களுக்கு வசதிகளை வழங்கக் கூடிய 15 அறைகள்
- மாணவர்கள் இருவருக்குப் பொருந்தக் கூடியவாறான இடவசதிகள் கொண்ட மேசை (4 ஓ 25)
- மாணவர்களின் தேவைகளுக்காக அறை வசதிகள்
- மாணவர்களுக்காக உணவக வசதிகள்
- மாணவர் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கம்

இலங்கையின் தனிநபர் தொழில் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் பொதுவாக 90மூ இக் கௌரவமான நிறுவனத்தின் ஊடாக உருவாகின்றது.



நூலகம்



கணினி ஆய்வுகூடம்



களியாட்ட வசதிகள்



கேட்போர் கூடம்



மனை நிர்வாகப் பயிற்சி



உணவகப் பயிற்சி

## இணைந்த அங்கீகரிக்கப்பட்ட ஏனைய உள்நாட்டு / வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் ஒரு சில விரிவுரையாளர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ருனுணு பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத் தகைமைகளைப் பெற்றுள்ளதுடன் ஒரு சிலர் கொழும்பு மற்றும் ருகுணு பல்கலைக்கழகங்களில் இதனைத் தொடர்கின்றனர்.

- இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு
- மலேசிய எம்.எஸ்.யூ. பல்கலைக்கழகம்
- தொழில்சார் மற்றும் கலைசார் மட்டத்தில் தொடராக தேசிய தொழில் பயிற்சித் தகைமை மட்டம் 4 மற்றும் 3 இற்குச் சமமாக இருத்தல்

### பயிலுனர் பயிற்சி

| தபால் முத்திரை மற்றும் தந்தி | 153,191.06 | 259,712.59 |
| மின்சாரம் மற்றும் எரிவாயு | 15,299,023.05 | 13,846,958.04 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | 748,440.00 | 1,030,588.66 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 29,312.48 | 93,341.75 |
| நிலையான சொத்துக் காப்புறுதி | 1,113,039.40 | 799,476.70 |
| லொன்றி | 593,148.16 | 409,512.59 |
| கட்டிடப் பராமரிப்பு | 5,500,665.07 | 1,471,636.84 |
| உபகரணப் பராமரிப்பு | 2,918,068.66 | 3,068,578.39 |
| பிரச்சாரம் மற்றும் ஊக்குவிப்பு | 3,165,275.57 | 3,587,163.15 |
| போக்குவரத்து | 4,000.00 | 21,410.00 |
| வங்கிக் கட்டணம் | 83,082.93 | 109,323.35 |

# இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
## வருமானம் மற்றும் செலவினம்

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான — பெறுமதி ரூ.

| | 2011 | 2010 மீள்தாரிக்கப்பட்ட |
|---|---|---|
| நிருவக மற்றும் நிறுவனச் செலவினம் | | |
| வங்கிக் கட்டணம் | 50,324.06 | 128,731.00 |
| பற்று வரி | 2,510,108.92 | 270,130.00 |
| வாகனப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு | 3,354,638.96 | 3,062,391.94 |
| வாடகை வாகனம் | 8,192,602.25 | 7,543,017.81 |
| மூலப் பொருள் | 2,828,317.50 | 3,146,505.82 |
| வெளி விரிவுரையாளர் கட்டணம் | 9,350.00 | 8,540.00 |
| போயூன் பானம் மற்றும் மலர் | 7,350,747.66 | 4,703,053.25 |
| வழிகாட்டல் வேலைத்திட்டங்கள் | 1,238.08 | - |
| செலாவணி மாற்றங்கள் | 168,000.00 | 16,500.00 |
| சபை உறுப்பினர் கொடுப்பனவு | 495,678.11 | 1,163,403.16 |
| பணியாளர் சபை பயிற்சி | 1,230,100.02 | 302,246.06 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 61,516.22 | - |
| நட்டம் மற்றும் நீக்குதல் | 1,353,002.60 | - |
| ஊழியர் பணிக்கொடை | 1,110,411.75 | 1,361,146.65 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 880,031.88 | 1,012,821.54 |
| நீர் | 36,310.00 | - |
| புள்ளிவிபரத் தயாரிப்பு | - | 222,300.00 |
| விசேட ஒப்படை வேலைத்திட்டங்கள் | - | 110,000.00 |
| மொத்தச் செலவினம் | 114,235,153.48 | 97,104,007.89 |

## இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
## வருமானம் மற்றும் செலவினம்

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான — பெறுமதி ரூ.

| | 2011 | 2010 மீள் தாரிக்கப்பட்ட |
|---|---|---|
| பாடசாலைக் கட்டணம் | 3,597,727.58 | 2,728,863.96 |
| தொழில்சார் பரிசோதனை வருமானம், எனையவை | 133,307.45 | 31,916.84 |
| ஏனைய வருமானம் | 49,980.97 | 27,792.80 |
| ஹோட்டல் பாடசாலை வருமானம் | 10,455.00 | 18,950.75 |
| மொத்த வருமானம் | 3,791,471.00 | 2,807,524.35 |
| கழி | | |
| நிர்வாகம் மற்றும் நிறுவனச் செலவினம் | 15,486,063.69 | 12,201,804.12 |
| தேய்மானம் | 1,100,861.83 | 867,853.00 |
| தேறிய செயற்பாட்டுச் செலவினம் | (12,795,454.52) | (10,262,132.77) |
| நிருவாக மற்றும் நிறுவனச் செலவினம் | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | 5,613,991.81 | 5,116,404.69 |
| விடுமுறைக் கொடுப்பனவுகள் | 36,414.25 | 42,510.60 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 209,187.50 | - |
| மேலதிக நேரம் | 57,812.07 | 53,971.28 |
| ஊழியர் சேமஇலாப நிதியம் | 637,998.95 | 545,782.52 |
| ஊழியர் பொறுப்பு நிதியம் | 127,599.78 | 109,156.50 |
| ஊழியர் நலம்புரி | 376,230.08 | 241,563.66 |
| பிரயாணம் செலவு - உள்நாடு | 199,587.50 | 109,036.00 |
| உபசரணை - உள்நாடு | 59,104.50 | 6,227.00 |
| ஊழியர் சீருடை | 2,250.00 | 8,546.00 |
| சுத்திகரிப்பு வழங்கள் | - | 56,930.00 |
| பல்வகை வழங்கள் | 1,832,787.19 | 1,010,084.53 |
| காகிதாதிகள் | 125,748.13 | 118,072.20 |
| அச்சு மற்றும் வெளியீடு | - | 73,918.00 |
| தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் | 705,098.32 | 264,009.12 |
| தபால், முத்திரை மற்றும் தந்தி | 24,600.50 | 27,952.00 |
| மின்சாரம் மற்றும் எரிவாயு | 889,178.28 | 499,505.86 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | 19,401.74 | 23,970.10 |
| லொன்றி | 14,516.00 | 13,608.00 |
| கட்டிடப் பராமரிப்பு | 45,033.13 | 372,574.27 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | 146,614.31 | 86,801.98 |
| போக்குவரத்து | 1,400.00 | 21,524.00 |
| வங்கிக் கட்டணம் | 250.00 | 12,840.00 |
| பற்று வரி - அநுராதபுரம் | 1,626.48 | - |
| வாடகை வாகனம் | 951,499.18 | 180,595.00 |
| மூலப்பொருள் | 1,644,234.36 | 1,600,091.71 |
| வெளி விரிவுரையாளர் கட்டணம் | 953,520.00 | 584,480.00 |
| போயூன் பானம் மற்றும் மலர் | 5,850.00 | 1,975.00 |
| பணியாளர் சபை பயிற்சி | 36,615.00 | 3,000.00 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 182,851.00 | 9,680.00 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 257,757.00 | 238,572.67 |
| நீர் | 278,160.63 | 205,757.88 |
| புள்ளிவிபரச் செயற்பாடுகள் | 32,500.00 | 2,400.00 |
| மஹிந்த சிந்தனை வேலைத்திட்டம் | 16,646.00 | 560,263.55 |
| மொத்தச் செலவினம் | 15,486,063.69 | 12,201,804.12 |

## இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
## வருமானம் மற்றும் செலவினம்

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

பெறுமதி ரூ.

| | 2011 | 2010 மீள் தயாரிக்கப்பட்ட |
|---|---|---|
| பாடசாலைக் கட்டணம் | 4,491,706.50 | 3,209,321.91 |
| தொழில்சார் பரிசோதனை வருமானம், எனையவை | 545,288.12 | 88,555.03 |
| ஏனைய வருமானம் | 782,818.70 | 108,360.00 |
| சுற்றுலா மற்றும் பயணங்கள் | 581,127.45 | - |
| ஹோட்டல் பாடசாலை வருமானம் | 1,400.00 | - |
| மொத்த வருமானம் | 6,402,340.77 | 3,406,236.94 |
| கழி | | |
| நிர்வாகம் மற்றும் நிறுவனச் செலவினம் | 15,653,364.34 | 14,836,801.72 |
| தேய்மானம் | 2,165,703.10 | 1,196,836.63 |
| தேறிய செயற்பாட்டுச் செலவினம் | (11,416,726.67) | (12,627,401.41) |
| நிருவாக மற்றும் நிறுவனச் செலவினம் | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | 3,853,319.32 | 4,646,729.35 |
| விடுமுறைக் கொடுப்பனவுகள் | 41,765.47 | 34,327.00 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 43,000.00 | - |
| மேலதிக நேரம் | 76,448.23 | 65,521.90 |
| ஊழியர் சேமஇலாப நிதியம் | 450,355.06 | 583,788.86 |
| ஊழியர் பொறுப்பு நிதியம் | 90,071.01 | 116,757.78 |
| ஊழியர் நலம்புரி | 318,701.60 | 275,247.20 |
| பிரயாணம் செலவு - உள்நாடு | 78,520.00 | 39,784.00 |
| உபசரணை - உள்நாடு | 13,139.00 | 10,862.50 |
| பணியாளர் சபை சீருடை | 2,250.00 | 8,546.00 |
| சுத்திகரிப்பு வழங்கள் | 12,069.00 | - |
| பல்வகை வழங்கள் | 1,972,005.63 | 1,923,795.04 |
| காகிதாதிகள் | 111,118.12 | 276,571.90 |
| அச்சு மற்றும் வெளியீடு | - | 69,112.00 |
| தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் | 383,125.79 | 495,194.59 |
| தபால், முத்திரை மற்றும் தந்தி | 45,284.00 | 34,546.50 |
| மின்சாரம் மற்றும் எரிவாயு | 922,912.65 | 694,066.97 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | 0.00 | 2,154.89 |
| லொன்றி | 158,405.00 | 157,060.00 |
| கட்டிடப் பராமரிப்பு | 173,164.00 | 154,333.50 |
| உபகரணப் பராமரிப்பு | 393,329.76 | 483,862.96 |
| போக்குவரத்து | 72,400.00 | 66,126.00 |
| வங்கிக் கட்டணம் | 7,250.00 | 1,125.00 |
| வாடகை வாகனம் | 1,064,938.59 | 915,160.00 |
| மூலப்பொருள் | 1,852,791.72 | 2,351,685.43 |
| வெளி விரிவுரையாளர் கட்டணம் | 2,503,587.34 | 1,022,355.00 |
| போயூன் பானம் மற்றும் மலர் | 27,487.68 | 13,889.00 |
| வழிகாட்டல் வேலைத்திட்டங்கள் | 447,422.00 | - |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 132,171.72 | 8,720.00 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 228,242.25 | 248,323.13 |
| நீர் | 164,249.40 | 135,635.22 |
| புள்ளிவிபரத் தயாரிப்பு | 13,840.00 | 1,520.00 |
| மொத்தச் செலவினம் | 15,653,364.34 | 14,836,801.72 |

## இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
## வருமானம் மற்றும் செலவினம்

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான | பெறுமதி ரூ.

| | 2011 | 2010 மீள் தயாரிக்கப்பட்ட |
|---|---|---|
| பாடசாலைக் கட்டணம் | 4,028,431.34 | 352,334.25 |
| தொழில்சார் பரிசோதனை வருமானம், ஏனையவை | 31,429.91 | - |
| ஹோட்டல் பாடசாலை வருமானம் | 8,550.00 | 71,039.50 |
| மொத்த வருமானம் | 4,068,411.25 | 423,373.75 |
| | | |
| கழி | | |
| நிர்வாகம் மற்றும் நிறுவனச் செலவினம் | 9,023,756.48 | 141,714.45 |
| தேய்மானம் | 1,408,150.93 | 217,311.65 |
| தேறிய செயற்பாட்டுச் செலவினம் | (6,363,496.16) | 64,347.65 |
| | | |
| நிருவாக மற்றும் நிறுவனச் செலவினம் | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | 2,158,177.32 | 2,850.00 |
| விடுமுறைக் கொடுப்பனவுகள் | 13,182.75 | - |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 324,750.00 | - |
| மேலதிக நேரம் | 80,012.04 | - |
| ஊழியர் சேமஇலாப நிதியம் | 223,996.06 | - |
| ஊழியர் பொறுப்பு நிதியம் | 44,799.21 | - |
| ஊழியர் நலம்புரி | 162,791.00 | - |
| பிரயாணம் செலவு - உள்நாடு | 26,086.00 | - |
| உபசரணை - உள்நாடு | 15,576.50 | - |
| ஊழியர் சீருடை | 75,260.71 | - |
| சுத்திகரிப்பு வழங்கள் | 4,853.00 | - |
| பல்வகை வழங்கள் | 1,659,914.48 | 129,474.45 |
| காகிதாதிகள் | 102,459.70 | - |
| தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் | 174,360.17 | - |
| தபால், முத்திரை மற்றும் தந்தி | 15,304.00 | 1,890.00 |
| மின்சாரம் மற்றும் எரிவாயு | 795,743.71 | - |
| லொன்றி | 15,535.00 | - |
| கட்டிடப் பராமரிப்பு | 59,551.06 | - |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | 86,448.59 | - |
| பற்று வரி | 1,301.58 | - |
| வங்கிக் கட்டணம் | - | 7,500.00 |
| வாடகை வாகனம் | 252,245.00 | - |
| மூலப்பொருள் | 1,499,629.10 | - |
| வெளி விரிவுரையாளர் கட்டணம் | 874,287.50 | - |
| போயூன் பானம் மற்றும் மலர் | 316.00 | - |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 155,252.00 | - |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 148,440.00 | - |
| நீர் | 53,484.00 | - |
| மொத்தச் செலவினம் | 9,023,756.48 | 141,714.45 |

* குறிப்பு: இரத்தினபுரி ஹோட்டல் பாடசாலை 2010 செப்டம்பர் மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

## இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
## சமுத்திரா ஹோட்டல்

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுமதி ரூ.

| | 2011 | 2010 மீள் தயாரிக்கப்பட்ட |
|---|---|---|
| விற்பனை உணவகம் | 10,284,847.46 | 10,643,596.53 |
| விற்பனை பான நிலையம் | 1,030,139.90 | 300,952.86 |
| விற்பனை அறை | 3,583,399.50 | 3,434,328.45 |
| ஏனைய வருமானம் | 2,239,709.77 | 2,820,065.69 |
| மொத்த வருமானம் | 17,138,096.63 | 17,198,943.53 |
| கழி | | |
| விற்பனைச் செலவினம் | 5,296,505.11 | 4,043,722.99 |
| மொத்த இலாபம் | 11,841,591.52 | 13,155,220.54 |

# கணக்காய்வு நிலைமைகள்

கணக்காய்ளளர் தலைமை அதிபதி திணைக்களம்

# 2011



විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதிதிணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: ටීඑම්/එච්/එස්එල්අය ටීඑච්එම්/එෆ්ඒ/2011
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date: 2012 ඔක්තෝබර් 13 දින

தலைவர்,
இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்,

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசோட்டக் கூற்று என்பனவும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 13(7)(ஏ) இன் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை நிறுவகத்தின் தலைவரிற்கு 2012 ஓகஸ்ட் 21 இல் வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

# 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| இ.க.நியமத்திற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இ.க.நி.18 | வேண்டப்பட்டவாறு காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் புறம்பாகக் காட்டப்படவில்லை. |
| (ஆ) - மேற்படி - | நியமத்தின் படி முற்றாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள், பயன்பாடிலில்லாத சொத்துக்களின் பெறுமதி மற்றும் கைதவிர்ப்புக்கள் என்பன புறம்பாக இணங்கானப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு செலவுகளாக ரூபா 36,780,516 தொகை இனங்கானப்பட்டிருந்தது. |

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

ஒவ்வொரு ஹோட்டல் பாடசாலைக் கிளைக்கும் புறம்பான வருமானக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் பாடசாலைகளுக்கு தலைமை அலுவலக செலவினத்தை ஒதுக்கீடு செய்வதற்குப் பிரயோகிக்கப்பட்ட செலவின் ஒதுக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலாக சமுத்திர ஹோட்டலுக்கு நேர் மற்றும் நேரில் மேந்தலைகளை ஒதுக்கீடு செய்வதற்கான கணக்கீட்டுக் கொள்கையும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 3,471,973 தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் இணைப்புக்கள் என்பன நானாவித உபகரணங்களாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு செலவுகள் சொத்துக்களின் மொத்தக் கிரயத்தில் 2.5மூ ஆல் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நடை பெறும் வேலைகளின் தொடர்புபட்ட பொறுப்பை இணங்கானாது அட்டுறு செலவுகள் கணக்கினூடாக நடைபெறும் வேலைகள் கணக்கிற்கு ரூபா 3,927,524 ஆன தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தவறான சீராக்கல் காரணமாக நடைபெறும் வேலைகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 1,959,360 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கிடப்படுவதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் மீண்டுவரும் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2.2.4 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் தொடர்புபட்ட உப பதிவேடுகள் என்பவற்றுக்கிடையில் தொடர்புபட்ட உப பதிவேடுகளுடன் மீதிகளை இணக்கஞ் செய்யப்படாமை காரணமாக பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| கட்டுப்பாட்டுக் கணக்குகளின் விபரம் | கணக்கின்படி மீதி வரவு/செலவு ரூபா | உப பதிவேடுகளின் விபரம் | உப பதிவேடுகளின் படி மீதி (வ/செ) ரூபா | வித்தியாசம் (வ/செ) ரூபா |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சுற்றுலா அதிகார சபையிடமிருந்து பெற வேண்டியவை | 52,211,595 (வரவு) | எஸ்எல்ரீடிஏ இன் கணக்குகள் | 6,476,785 (செலவு) | 45,734,810 (வரவு) |
| (ஆ) - மேற்படி - | 863,709 (வரவு | - மேற்படி - | இல்லை | 863,709 (வரவு) |
| (இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டியவை | 3,934,242 (செலவு) | - மேற்படி - | 8,803,136 (செலவு) | 4,868,894 (செலவு) |
| (ஈ) இலங்கை மகாநாட்டுப் பணியகத்திடமிருந்து பெற வேண்டியவை | 244,166 (வரவு) | எஸ்எல்சீபீயின் கணக்குகள | 98.469 (செலவு) | 145,697 (வரவு) |
| (உ) இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்திடமிருந்து பெற வேண்டியவை | 734,666 (வரவு) | எஸ்எல்ரீபீ இன் கணக்குகள | 54,179 (செலவு) | 680,487 (வரவு) |
| (ஊ) - மேற்படி - | 3,128,263 (வரவு) | - மேற்படி - | இல்லை | 3,128,263 (வரவு) |
| (எ) இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்திற்குச் செலுத்தப்பட வேண்டியவை | - இல்லை - | - மேற்படி - | 658,734 (வரவு) | 658,734 (வரவு) |

## 2.2.5 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கணக்காய்விற்குத் தரப்பட்ட காலப்பகுப்பாய்வின்படி, வியாபார கடன்பட்டோர் மீதிகளின் ரூபா 3,927,892 ஆன தொகை 4 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தன மேலும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் போன்றவற்றிடமிருந்து பெற வேண்டிய முறையே ரூபா 6,939,510 மற்றும் ரூபா 734,666 ஆன தொகைகள் 4 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தன.

(ஆ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின் படி, நானாவித கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 3,934,242 ஆன தொகை உண்மையான பொறுப்பை இணங்காண முடியாமை காரணமாக 2007 ஆம் ஆண்டிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படாது இருந்தன. எனினும், இணங்காணப்படாத செலவு மீதிகளை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சுற்றுலாத்துறை அமைச்சிடமிருந்து பெற வேண்டிய ரூபா 1,232,233 இன் அறவீடு அமைச்சிலோ அல்லது நிறுவகத்திலோ மூல ஆவணங்கள் இன்மை காரணமாக சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

(ஈ) பதவியினருக்கு கொடுக்கப்பட்ட ரூபா 811,030 தொகையான முற்பணங்கள் 4 ஆண்டுகளிற்கு மேலான காலப் பகுதியாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளிலுள்ள ரூா 571,985,108 கூட்டுமொத்தத் தொகையுள்ள பதினொரு விடயங்களை ஆதார ஆவணங்கள், கணிப்பீட்டு விபரங்கள், ஒப்பந்த உடன்படிக்கைகள், மெய்மையாய்வு அறிக்கைகள், சொத்துப் பதிவேடுகள், இருப்புப் சீராக்கல் தொடர்பான விபரங்கள், கேள்வி ஆவணங்கள் போன்றவாறான சான்றுகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு 8 (1) | ஒரு பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னா் மூன்று மாத காலத்திற்குப் பிந்தாமல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 10 (5) | நிறுவகத்தின் தேறிய மிகை 2008 ஆம் ஆண்டிலிருந்து திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளிற்கான நிறுவகத்தின் தேறிய மிகை சுமாா் ரூபா 100 மில்லியனாகும். |
| (iii) பிரிவு 14 (1) | மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை நிறுவகத்தின் செயலாற்றலைக் காண்பித்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் பிரிவு - 58 | வரி விதிப்புக் காலத்தின் இறுதி நாளிலிருந்து 2 மாதங்களிற்கிடையில் வற் மீளளிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், ரூபா 5,346,433 தொகையான மீளளிக்கப்பட வேண்டிய வற் மீளளிப்புக்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காது 2007 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடிஃ12 ஆம் இலக்க நல்ல ஆளுகைக்கான பொது முயற்சிகள் சுற்று நிருபம் | |
| | (i) அத்தியாயம் 4 இன் பிரிவு 4.2.2 | சிரேஷ்ட முகாமைத்துவம், மாதாந்த செயலாற்றல் அறிக்கைகள், தொழிற்பாட்டுக் கூற்றுக்கள், கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி, மனித வளங்கள் பற்றிய கூற்று, கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மற்றும் இருப்புக்களின் காலப் பகுப்பாய்வுகள் நகர்வற்ற மற்றும் மெதுவாக நகரும் மற்றும் மேலதிக இருப்புக்களின் கூற்று போன்றவற்றை சபைக் கூட்டங்களில் அட்டவனைப்படுத்தும் பொறுப்பைக் கொண்டிருந்த போதிலும் அந்தத் தகவல்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) அத்தியாயம் 7 இன் பிரிவு 7.4.1 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு முறையாவது ஒழுங்கான அடிப்படையில் கூட வேண்டுமென்ற போதிலும், மீளாய்வாண்டில் குழுவின் ஒரு கூட்டம் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. |
| | (iii) அத்தியாயம் 9 இன் பிரிவு 9.12 | முயற்சியால் கடைப்பிடிக்கப்படும் எந்த நலன்புரித் திட்டத்திற்கும் பொது திறைசேரியின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும், நிறுவகம் ஊழியர் மருத்துவ காப்புறுதி திட்டத்திற்கான அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. |
| (ளை) | 9 ஆம் அத்தியாயத்தின் 9.4.1 ஆம் பிரிவு | மனித வளங்கள் தொடர்பான சகல விடயங்கள் மீதான விதிகள் மற்றும் பிரமாணங்கள் வழங்குகின்ற மனித வளங்கள் மீதான அத்தியாயம் ஒன்றுடன் நடை முறைக் கைநூல் திறைசேரிச் செயலாளரின் ஒத்திசைவுடன் சேர்த்து சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகம் இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேறிய கொள்வனவு முகவாராண்மை சுற்று நிருபத்தின் அத்தியாயம் 4 இன் பிரிவுகள் 4.2.1 (அ) மற்றும் (இ) | அடுத்த ஆண்டிற்கான விபரமான திட்டத்துடன் சேர்த்து கடந்த மூன்று ஆண்டுகளை உள்ளடக்கியதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் நிறுவகம் ஒரு கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐஃ2002ஃ2 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிருபம் | நிறுவகத்திற்குச் சொந்தமாக உள்ள கணணிகள், கணணி உப பாகங்கள், மற்றும் மென்பொருட்கள் என்பவற்றிக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு சுற்று நிருபத்தின் வேண்டுகையின்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | தாபன விதிக் கோவையின் அத்தியாயம் ளை இன் பிரிவு 10.2 | ஆட் சேர்ப்புக்கள் மாற்றங்கள், சம்பளங்கள் போன்ற மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்பாக நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கடிதங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.8 அங்கீகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர் நாயகத்திடமிருந்தான உரிய அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 7,253,641 தொகையான கடன் விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 55,649,410 ஆன மிகையை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த மிகையான ரூபா 41,659,120 உடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 13,990,290 ஆன அதிகரிப்பைக் காட்டுகின்றது. சுற்றுலா அபிவிருத்தி மற்றும் விமான நிலைய வரி மற்றும் ஹோட்டல் பாடசாலைக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானம் என்பன ரூபா 48,930,565 ஆல் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகும்.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் ரூபா 265 மில்லியன் வருமானத்தை முன்னைய ஆண்டின் ரூபா 217 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 22மூ அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதே நேரம் மீளாய்வாண்டில் கற்பித்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட ரூபா 209 மில்லியன் செலவினத்தை முன்னைய ஆண்டிற்கான ரூபா 175 மில்லியனுடன் ஒப்பிடலாம் இது 19மூ அதிகரிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போதான நிறுவகத்தின் வருமானம் மற்றும் செலவினத்திலான மாற்றங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2011<br>ரூபா. மில் | 2010<br>ரூபா. மில் | முரண்<br>ரூபா. மில் | % |
|---|---|---|---|---|
| விமான நிலைய மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி | 214 | 173 | 41 | 23 |
| ஏனைய வருமானம் | 51 | 44 | 7 | 16 |
| நிருவாக செலவினம் | 74 | 67 | 7 | 10 |
| கற்பித்தல் பொருட்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுப் பொருட்கள் | 98 | 74 | 24 | 32 |
| பெறுமானத் தேய்வு மற்றும் ஏனைய செலவுகள் | 37 | 34 | 3 | 8 |
| தேறிய மிகை | 56 | 42 | 14 | 33 |

### 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

| உரிமை மூலதன வீதங்கள் | நியம வீதம் | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| நடைமுறை வீதம் | 2.1 | 5.72 | 5.28 | 4.41 |
| விரைவு வீதம் | 1.1 | 5.67 | 5.23 | 2.85 |

நியமங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான நடைமுறை மற்றும் விரைவு வீதங்கள் சுமார் 5 மடங்குகளாக இருந்தன. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது மொத்த நடைமுறைச் சொத்துக்களில் காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் முறையே 53மூ மற்றும் 62மூ ஐ பிரதிநிதித்துவப்படுத்தின. எனினும், முறையான காசு முகாமைத்துவமின்மையால் மேலதிக பணம் நீண்ட மற்றும் நடுத்தர கால முதலீடுகளில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு பூராகவும் வங்கிக் கணக்குகளிலிருந்த மேலதிக காசு மீதிகள் சுமார் 150 மில்லியனாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 ஹோட்டல் பாடசாலைகளின் செயலாற்றல்

#### 4.1.1 மாணவர்களிற்கான பயிற்சி (உள்ளக)

| பாட நெறிகளின் பெயர் | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கைவினை மட்டம் | 404 | 266 |
| சான்றிதழ் மட்டம் | 1214 | 862 |
| முகாமைத்துவ மட்டம் | 183 | பாடநெறி 2012 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்படும் |
| இடைத்தர மட்டம் | 30 | 28 |
| உயர் தரம் | 36 | 33 |
| மொததம் | 1867 | 1189 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ மட்ட பாடநெறி தவிர, பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களுடன் ஒப்பிடுகையில் பாட நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் 1189 அல்லது 63மூ ஆக இருந்தனர். 2010 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை முறையே 1094 மற்றும் 943 ஆக இருந்தன.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, ஆறு ஹோட்டல் பாடசாலைக் கிளைகளின் கற்பித்தல் நடவடிக்கைகளை நடாத்துவதற்கான நேர்ச் செலவினமாக ரூபா 209 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஒரு மாணவரிற்கான கிரயம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காகத் தரப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டிணைந்த திட்டத்தின்படி, தற்போதைய 0.88 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டளவில் சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கையை 2.5 மில்லியன் வரை அதிகரிக்க எதிர்பார்க்கப்பட்டது. எனினும், மேற்பட்ட இலக்கிற்கு சமாந்தரமாக கைத்தொழில் துறையின் மேற்படி நோக்கங்களை எய்துவதற்கான மனித வள தேவைப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில் நிறுவகத்தின் தந்திரரோபாயங்கள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

நிறுவகத்தால் நடாத்தப் பெற்ற வெளி நிலைய பயிற்சி பாட நெறிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகமானது, 11 மொழிகளிற்கான மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குப் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 4 மொழி நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டன.

(ஆ) நிறுவகமானது, மீளாய்வாண்டில் மின் ஊடக அடிப்படையிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்குப் பட்டியல் படுத்தப்பட்டிருந்த போதிலும் அமுலாக்கல் திட்டமின்மை காரணமாக நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிதிகளின் பயன்பாடு

ரூபா 96 மில்லியன் தொடக்கம் ரூபா 99 மில்லியன் வரை வீச்செல்லையான வங்கி மீதிகள் நலிந்த நிதி முகாமைத்துவம் காரணமாக நிறுவகத்திற்கு எதுவித வருமானமுமின்றி மீளாய்வாண்டு பூராகவும் வங்கி நடைமுறைக் கணக்கில் பயன்பாடின்றி இருக்க விடப்பட்டது.

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

2008 சனவரியில் சுற்றுலா வளங்கள் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,929,385 பெறுமதியான ஹோட்டல் உபகரணங்கள் 2012 யூலை 30 வரையிற்கூட பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சமுத்திரா ஹோட்டலின் ஹோட்டல் அறைகள் சாத்திய வளக் கற்கை மற்றும் உரிய கிரய மதிப்பீடுகள் என்பவற்றை நடாத்தாமலும் கேள்வி நடைமுறையைப் பின்பற்றாமலும் புதுப்பிக்கப்பட்டிருந்தன. நிருமான வேலைகள் ஒரு தனியார் கம்பனிக்கு அந்தக் கம்பனியால் குறிக்கப்பட்டவாறு ரூபா 51 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலைகளின் மதிப்பிடப்பட்ட நட்டம், பூர்த்தியாக்கப்பட்ட ஒப்பந்த வேலைகளின் நலிந்த தரம் காரணமாக மொத்த கிரயத்தின் அரைவாசியாக இருக்கலாம்.

## 4.5 முகாமைத்துவ தகவல் முறைமையின் தரம் மற்றும் நம்பகத்தன்மை

மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளின் போது கணனி வன்பொருள் மற்றும் மென்பொருளை கையகப்படுத்துவதற்காக ரூபா 30 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் முகாமைத்துவ தகவல் தேவைப்பாடுகளை இணங்கண்ட பின்னர் பொருத்தமான முறைமை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.6 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டில் சமுத்திர ஹோட்டலின் பதவியணி உட்பட நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்விசார பதவியணி 99 ஆக இருந்தது. 16 விரிவுரையாளர்கள் உள்ளடங்கலாக மொத்த வெற்றிடங்கள் 36 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உழியர்களின் சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய படிகள் என்பவற்றிற்காக நிறுவனத்தால் முறையே ரூபா 74 மில்லியன் மற்றும் ரூபா 67 மில்லியன் தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 4.7 போக்குவரத்து அணி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டில் 02 வாகனங்களின் எரிபொருள், பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் என்பவற்றிக்காக ரூபா 1,057,641 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், பிரயாணம் செய்யப்பட்ட தூரம் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 07 வாகனங்களின் வாடகைக்காக ரூபா 3,355,862 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வாடகை வாகனங்கள் மூலம் பிரயாணம் செய்யப்பட்ட தூரம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2010 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்காக நிறுவகத்திற்காக ஒரு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மனித சக்தி அபிவிருத்தி தந்திரரோபாயங்கள், உற்பத்தி அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் தொடர்பான பிரதான நடவடிக்கைகளில் சில மீளாய்வாண்டுடன் இணைந்ததாக ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணங்கிய வகையில் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக ஒரு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு தொடர்பிலான இலக்குகளில் சில கீழே காட்டப்பட்டவாறு எய்தப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டில் உள்ளக பாடநெறியை நடாத்துவதன் மூலம் 2500 மாணவர்களை பயிற்றுவிப்பதற்குப் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 1,189 மாணவர்கள் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்

(ஆ) இளைஞர் வலுவூட்டல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1000 மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் 400 மாணவர்கள் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

(இ) தனியார்துறை ஹோட்டல் பாடசாலைகளின் பங்கு பற்றுதலுடன் அதிகாரமளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1750 மாணவர்களை பயிற்றுவித்தல் மற்றும் சுற்றுலா கைத்தொழில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு அவசியமான திறமைகள் வழங்குவதற்கான பிரேரணை என்பன மீளாய்வாண்டில் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீட்டிற்கும் உண்மையானவற்றிற்குமிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டன. பாதீடப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் சில செலவின விடயங்களின் உண்மையான செலவினம் 12மூ - 427மூ வரை விஞ்சியிருந்தன. ஆகையால் பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் ஒரு பயனுறு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை அது காட்டுகின்றது.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளக கட்டுப்பாட்டு முறைமையைப் பலப்படுத்தும் நோக்கில் 2007 ஆண்டிலிருந்து நிறுவகத்தில் ஒரு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிக்கப்புக்கள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (ஆ)

பாதீடு

(இ) மனித வள முகாமைத்துவம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கொள்வனவுகள்

(ஊ) முற்பணங்களின் கொடுப்பனவு

(எ) கணக்கீடு மற்றும் கணக்குப் பதிவுகள் (ஏ)

உள்ளகக் கணக்காய்வு

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி